Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

**Subject: - Tamil**

**2021. 01 18**

**Grade: - 10**

**Prepared by- Kg/Dehi/Garagoda Muslim M.V Yatiyantova**

அலகு 1 – நீதிப்பாடல்கள்

1) விவேக சிந்தாமணி - தண்டாமரையின் ... என்ற பாடலை ஆதாரமாகக் கொண்டு விடை தருக.

அ) இப்பாடல் எக்காலத்துக்குரியது?

ஆ) இது எப்பாவினால் பாடப்பட்டது?

இ) மண்டுகத்தின் இயல்பு யாது?

ஈ) வண்டுகளின் இயல்பு யாது?

உ) அறிவுடையோர் இயல்பு யாது?

ஊ) புல்லர்களின் இயல்பு யாது?

எ) அறிவிலார் செயல் உவமிக்கப்பட்டிருக்குமாற்றை எடுத்துக்காட்டி விளக்குக?

ஏ) அறிவுடையோர் குணங்கள் விளக்கப்பட்டிருக்கும் விதத்தை உவமை மூலம் எடுத்துக்காட்டுக?

2) வெற்றி வேட்கை – தேம்படுபனையின் ... என்ற பாடலை ஆதாரமாகக் கொண்டு விடை தருக?

அ) இப்பாடல் யாரால் எக்காலத்தில் பாடப்பட்டது?

ஆ) இது வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

இ) உருவத்தில் பெரியோரெல்லாம் பெரியரருமல்லர் என்ற கூற்று எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

ஈ) உருவத்தில் சிறியோரெல்லாம் சிறியரருமல்லர் என்ற கூற்று எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

3) வாக்குண்டாம் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக?

அ) கொக்கின் இயல்பு?

ஆ) அடக்கமுடையார் இயல்பு?

இ) நீதிக்கருத்து?

ஈ) இப்பாடலை பாடிய புலவர் யார்?

உ) வாக்குண்டாம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

4) திரிகடுகம் என்ற பாடலில்,

அ) வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்களும் எவை?

ஆ) திரிகடுகம் என்பதால் கருதப்படும் மருந்துப் பொருட்கள் மூன்றும் எவை?

இ) பாடிய புலவர் யார்?

5) அ) முதுமொழி வெண்பா பாடியவர் யார்?

ஆ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முதுமொழி யாது?

இதற்குச் சமமான வேறு பழமொழிகள் எவை?

இ) மனநிறைவை எடுத்துக்காட்டும் மூன்று செயல்களும் எவை?

6) நாலடியார் பாடல் எக்காலத்துக்குறியது?

இப்பாடல் கூறும் கூடா நட்பு, நல்ல நட்பு பற்றி விளக்குக?